## சிறுபான்மையினருக்கு

# தி.மு.கழகமும், தி.மு.க. அரசும் என்றும் பாதுகாப்பு அரணாக நிற்கும்!

### கிறித்துவ சமூக பொருளாதாரக் கூட்டமைப்பு நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, மார்ச் 4–**

**சிறுபான்மையினருக்கு தி.மு. கழகமும், தி.மு.க. அரசும் என்றும் பாதுகாப்பாக இருக்கும் என்று கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கிறித்துவ சமூகப் பொருளாதாரக் கூட்டமைப்பு நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

அவரது உரை வருமாறு:

தமிழ்நாட்டில் உள்ள கிறித்துவ சமூகத்திலிருந்து வந்திருக்கும் மிக முக்கியமான பெருமக்கள் மத்தியில் உரையாடுவது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

மிக முக்கியமான நேரத்தில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. இதற்கு ஏற்பாடு செய்தவர்களுக்கும், இதில் என்னை பங்கேற்கச் செய்த பால்வளத்துறை அமைச்சர் அண்ணன் மனோ தங்கராஜ் அவர்களுக்கும் என்னுடைய நன்றி.

தொழிற்துறை, கல்வி, மருத்துவம், சமூக நலன் என எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், அதில் தமிழ்நாட்டில் உள்ள கிறித்துவ சமூகத்தினரின் பங்களிப்பு மிகவும் அளப்பரியது.

எதற்காக இந்த மண்ணில் சமத்துவமும் – சமூக நீதியும் இருக்கணும்னு திராவிட இயக்கம் பாடுபட்டதோ, அதே விஷயங்களுக்காகத் தான் கிறிஸ்தவ அமைப்புகளும் பாடுபட்டன.

**கல்விக் கூடங்கள் பெருமளவில் திறப்பு!**

பல்லாயிரம் ஆண்டுகளாக, குறிப்பிட்ட சமூகத்தினர் மட்டும்தான் கல்வி கற்க வேண்டும். மற்றவர்கள் கல்வி கற்கக் கூடாது என்று ஒரு கூட்டம் சொல்லியது. அந்தச் சமயத்தில், எல்லாருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்று, கிறித்துவ மிஷனரிக்கள் பல கல்விக்கூடங்களைத் திறந்துவிட்டார்கள்.








100, 150 ஆண்டுகளுக்கு முன்பு, தொடங்கப்பட்ட அந்தக் கிறித்துவக் கல்விக் கூடங்கள் பல இன்றும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

நானுமே கூட எனது பள்ளிப் படிப்பை எழும்பூர் டான் பாஸ்கோ பள்ளியிலும், லயோலா கல்லூரியில் எனது பட்டப் படிப்பையும் படித்தேன். நான் மட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சென்னைக் கிறித்துவக் கல்லூரி மேல்நிலைப் பள்ளியில தான் படித்தார். அவர் படித்த மாநிலக் கல்லூரியை, பிரிட்டிஷார் காலத்தில் கிறித்துவ அதிகாரிகள்தான் உருவாக்கினார்கள்.

**வாழ்நாள் அங்கீகாரம்!**

படிப்பைத் தாண்டி, நல்ல ஆங்கில அறிவு, பொது அறிவு, அரசியல் அறிவு, நல் ஒழுக்கம் போன்றவற்றையும் கிறித்துவக் கல்வி நிறுவனங்கள் அன்று போலவே இன்றும் சிறப்பாகக் கற்றுக் கொடுக்கின்றன.

கிறித்துவக் கல்வி நிலையங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகமும், தி.மு.க. அரசும் எப்போதும் தூணாக இருந்து ஆதரவு அளித்து வருகிறது. சமீபத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிலையங்களுக்கு வாழ்நாள் அங்கீகாரம் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

மேலும், கிராமப் பகுதிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான சிறுபான்மையின பள்ளிகளுக்கும், முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டத்தை நமது முதலமைச்சர் அவர்கள் விரிவாக்கம் செய்துள்ளார். இதுவரை இந்தத் திட்டத்தில் சுமார் 17 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வந்தனர். இப்போது இந்த விரிவாக்கத்துக்குப் பிறகு, இன்னும் பல சிறுபான்மை குழந்தைகள் பயனடைவார்கள்.

ஆனால் அதே நேரத்தில், ஒன்றிய அரசு, சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கான 'போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகையை' நிறுத்தி வைத்துள்ளது.

கல்வி மட்டுமில்லாமல், மருத்துவம், தொழிற்துறையிலும் கிறித்துவ மக்கள் இன்று பல உயரங்களைத் தொட்டு வருகிறீர்கள்.

கிறித்துவப் பெருமக்கள் நடத்துகிற பல இலவச மருத்துவமனைகள், சத்தமில்லாமல் மக்களுக்குச் சேவை செய்துகொண்டு வருகின்றன. மதத்தின் பெயராலும், கலாச்சாரத்தின் பெயராலும் தடுப்பூசிகளுக்கு எதிர்ப்பு வந்தபோது, தடுப்பூசிகள் குறித்த விழிப்புணர்வை கிறித்துவ மருத்துவ நிறுவனங்கள்தான் ஏற்படுத்தின. அதனால்தான், கொரோனா வந்தபோது கூட அதற்கான தடுப்பூசிகளை மக்களிடம் கொண்டு போய் எளிதில் சேர்க்க முடிந்தது.

**கிறித்துவ கல்வி நிலையங்களில் பங்களிப்பு!**

மருத்துவக் கல்வியில் கிறித்துவக் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. தமிழ்நாட்டில் 'நீட்' தேர்வை ஒன்றிய அரசு கொண்டு வர முயற்சி செய்தபோது, அதை எதிர்த்து முதலில் உச்ச நீதிமன்றம் சென்றது வேலூர் கிறித்துவ மருத்துவக்கல்லூரி நிர்வாகம்தான்.

அதே போல தொழிற்துறையிலும் பல கிறித்துவ தொழில்முனைவோர்கள் எண்ணற்ற சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். இன்று திருச்சி செயின்ட் ஜோசப், பாளையங்கோட்டை செயின்ட் சேவியர்ஸ் போன்ற கல்வி நிலையங்களில் படித்த பலர் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் தொழில் அதிபர்களாக வளர்ந்து வருகிறார்கள்.

நாம் இன்று ஒரு முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறோம். இன்னும் சில நாட்களில் தேர்தல் வரவுள்ளது. இது ஏதோ தேர்தலுக்காகச் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். இந்தியாவுக்காகவும், இந்தியாவின் பன்முகத்தன்மையைக் காப்பாற்றுவதற்காகவும் சொல்கிறேன்.

ஒரே நாடு - ஒரே மதம் - ஒரே மொழி - ஒரே உணவு என்று போய்க் கொண்டிருக்கும் பாசிஸ்ட்டுகளுக்கு முடிவு கட்ட வேண்டும்.

**பா.ஜ.க. ஆட்சிக்கு வருவதை தடுத்து நிறுத்த வேண்டும்!**

இப்போது வரவுள்ள தேர்தலை ஏதோ, இன்னுமொரு தேர்தல் என்று நாம் கடந்து போக முடியாது. இன்னொருமுறை ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், மணிப்பூரிலும் காஷ்மீரிலும் நடந்தவை இந்தியா முழுக்க நடந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அதை நாம் தடுத்து நிறுத்த வேண்டும்.

தேர்தலில் நிறைய கிறித்துவ வேட்பாளர்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள், கிறித்துவக் கல்வி நிறுவனங்களில் 'திறன் மேம்பாட்டுப் படிப்புகள்' வழங்கப்பட வேண்டும் என்று என்னிடம் நீங்கள் பல கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறீர்கள். அவை அனைத்தையும் நிச்சயமாக நமது முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சென்று, அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன் என்று கூறிக் கொள்கிறேன்.

2021 சட்டமன்றத் தேர்தலிலேயே, கிறித்துவ நல்லெண்ண இயக்கத்தின் சகோதரர் இனிகோ இருதயராஜ் அவர்களுக்கு, தலைவர் அவர்கள் வாய்ப்பு கொடுத்தார்கள். ஏற்கெனவே தி.மு.க.வில் அமைச்சர்களாகவும், எம்.எல்.ஏ.க்களாகவும் கிறித்துவர்கள் இருக்கிறார்கள். எனவே, நிச்சயம் உங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

சிறுபான்மை மக்களுக்கு அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் பாதுகாப்பு அரணாக தி.மு.கழகம் நிற்கும். இதுவரை எப்படி தி.மு. கழகத்துக்கும், தி.மு.க. அரசுக்கும் நீங்கள் ஆதரவு தந்தீர்களோ, அதே போல இந்த முறையும் தர வேண்டும் என்று அன்போடும் உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவை மீட்க, அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ், பங்குத்தந்தை வின்சென்ட் சின்னதுரை, சாம் பால் தினகரன், இந்துஸ்தான் கல்விக் குழும இயக்குநர் ஆன்னி ஜேக்கப், குளோபல் லாஜிஸ்டிக்ஸ் சொல்யூஷன்ஸ் நிறுவனர் நவீன் பிரகாஷ், கவனென்ட் குழும முதன்மை செயல் அலுவலர் ஜோஷுவா மதன், சத்தியம் தொலைக்காட்சியின் ஜசக் லிவிங்ஸ்டன் மற்றும் கிறித்துவ சமூக, பொருளாதார மையத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

### பதிவுத் துறையில் ஆவணம் தாக்கல் செய்பவரின் பெயரை

# மேம்படுத்தப்பட்ட காட்சிக் கருவி மூலம் அறிவிக்கும் வசதி!

### வணிக வரி - பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 4-

பதிவுத்துறையில் ஆவணம் தாக்கல் செய்பவரின் பெயர் மற்றும் டோக்கன் எண் ஆகியவற்றை மேம்படுத்தப்பட்ட காட்சிக்கருவி (Token number Display Unit) மூலம் காண்பித்து, அறிவிக்கும் வசதி ரூ.3.64 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியை நேற்று முன்தினம் (01.03.2024) சென்னை அண்ணாசாலையில் உள்ள தியாகராய நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்கள்.

2021 - 22ம் ஆண்டு சட்டப்பேரவை கூட்டத் தொடரில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவிற்காக கூட்டமாக வரும் பொதுமக்களின் வருகையை முறைப்படுத்தும் நோக்கில் "அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் பொருத்தப்பட்டுள்ள அடையாள வில்லை காட்சிக்கருவியில் தற்போது டோக்கன் எண் மட்டுமே காட்சிப்படுத்தப்படுவதால் ஆவணதாரர்கள் தங்கள் வரிசைக்கிரம முன்னுரிமையை அறிந்து கொள்வதில் குழப்பம் நிலவுகிறது என்பதால். இதனைத் தவிர்க்கும் வகையில் ஆவணதாரர்களின் பெயரும் காட்சிப்படுத்தப்படும் வகையிலான மேம்படுத்தப்பட்ட காட்சிக்கருவிகள் (Token Display Unit) அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் பொருத்தப்படும்." என்று வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து ஆவணப் பதிவில் வரிசைக்கிரமத்தை விடுதலின்றியும் வெளிப்படையாகவும் உறுதி செய்வதற்காக டோக்கன் எண்ணோடு ஒவ்வொரு பதிவுடனும் தொடர்புடைய நபரை பெயர் சொல்லி அழைக்கும் வகையில் இந்த வசதியானது ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான மொத்த செலவு ரூபாய் 3,63,95,508/ ஆகும்.

இந்த மேம்படுத்தப்பட்ட காட்சிக்கருவிகள் ஆவணம் தாக்கல் செய்பவர் பெயர், டோக்கன் எண் ஆகியவற்றை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் காட்சிப் படுத்தப்பட்டு அறிவிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆவணம் செய்ய இருப்பவரின் பெயரும், டோக்கன் எண்ணும் ஒரே சமயத்தில் அறிவிக்கப்படும் போது திரையில் அடுத்த இரண்டு வில்லைகளின் விபரங்களும் காட்சிப் படுத்தப்படும்.

பதிவுக்கு வரும் பொதுமக்கள் தங்கள் டோக்கன் எண் எப்போது வரும் என்பதை பதைபதைப்புடன் எதிர்நோக்கி காத்திராமல், இந்த புதிய வசதியின் மூலம் தங்கள் பெயரும், டோக்கன் எண்ணும் காட்சிக்கருவியில் காண்பிக்கப்பட்டு பெயர் சொல்லி அழைக்கப்பட்டவுடன் அலுவலகத்திற்குள் பதட்டமின்றி சென்று, எளிமையாக பதிவு செய்து கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில் வணிக வரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட கழக மகளிர் தொண்டரணி சார்பில் ஈரோடு வெண்டிபாளையத்தில் உள்ள உதவும் கரங்கள் குழந்தைகள் காப்பகத்தில் மாவட்ட அமைப்பாளர் பேபி லோகநாதன் தலைமையில் மேயர் நாகரத்தினம், சுப்பிரமணியம் நல உதவிகளை வழங்கினர். நிகழ்வில் பகுதி செயலாளர் அக்னி சந்துரு. மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, கனிமொழி, லீலா, மகேஸ்வரி, நாகரத்தினம், மாமன்ற உறுப்பினர்கள் குணசேகரன், தண்டபாணி, மண்டல குழு தலைவர் சசிகுமார் அயூப், கே.சந்திரசேகர், இளமுருகு, மாவட்ட மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஜானகி, கோகிலா, செல்வி, சிவமதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


